ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2295/05 - 2022 අගෝස්තු මස 30 වැනි අඟහරුවාදා - 2022.08.30
2295/05 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*பணிப்புரை இல. 86*

*ச.வ.பி. 4/2011*

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் 10(1) (ஆ) (ii) ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை**

*2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தவிசாளர், சாந்த நிரியெல்ல ஆகிய நான், நுகர்வோர் பாதுகாப்பிற்காக –*

*(அ) நிரல் 2 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களை உற்பத்தி செய்தல், சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல் மற்றும் பற்றுக்கொள்ளல்களில் ஈடுபடுகின்ற முதலாம் அட்டவணையின் நிரல் 1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள உற்பத்தியாளர்கள் எவரும் அட்டவணையின் நிரல் 3 இல் காணப்படுகின்ற விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட நிலைமைகளிற்கு உட்பட்டு உற்பத்தி, சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை மற்றும் பற்றுக்கொள்ளலை மேற்கொள்ள வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றேன்.*

*(ஆ) நிரல் 2 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதி செய்தல், சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல் மற்றும் பற்றுக்கொள்ளல்களில் ஈடுபடுகின்ற இரண்டாம் அட்டவணையின் நிரல் 1 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வியாபாரிகள் எவரும் அட்டவணையின் நிரல் 3 இல் காணப்படுகின்ற விடயத்திற்கு நேரொத்ததாகவுள்ள குறித்துரைக்கப்பட்ட நிலைமைகளிற்கு உட்பட்டு உற்பத்தி, சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை மற்றும் பற்றுக்கொள்ளலை மேற்கொள்ள வேண்டுமென பணிப்புரை விடுக்கின்றேன்.*

1A - PG 5950 — 81 (2022/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**முதலாம் அட்டவணை**

| *நிரல் 1*<br>*உற்பத்தியாளர்களின் வகை* | *நிரல் 2*<br>*பொருட்கள்* | *நிரல் 3*<br>*நிபந்தனைகள்* |
|---|---|---|
| (1) ஏதேனும் பண்டம் அல்லது ஏதேனும் பொருட்களை தயாரிக்கும் எவரேனும் ஆள்<br><br>(2) இரசாயன செயன்முறையினாலோ அல்லது வேறு வழிகளிலோ ஏதேனுமொரு பொருளை அல்லது பாகத்தை ஒருங்கிணைக்கும் அல்லது இணைக்கும் எவரேனும் ஆள்<br><br>(3) ஏதேனும் பண்டத்தை விற்பனைக்காக மாற்றியமைக்கும் எவரேனும் ஆள் | (அ) விலங்குத் தீவணம்<br>(ஆ) குடிநீர் போத்தல்<br>(இ) தகரத்திலடைக்கப்பட்ட மீன்<br>(ஈ) சீமெந்து<br>(உ) பருப்பு<br>(ஊ) டயப்பர்கள் மற்றும் சனிடரி நப்கின்ஸ்<br>(எ) சமையல் தேங்காய் எண்ணெய்<br>(ஏ) சமையல் உப்பு<br>(ஐ) முட்டைகள்<br>(ஒ) உரங்கள் (பசளை அல்லது இரசாயனம்)<br>(ஓ) பால் மா, தூய பசும் பால் அல்லது குழந்தைகளுக்கான பால் மா<br>(ஔ) அரிசி<br>(க) எஃகு மற்றும் இரும்புக் கம்பிகள்<br>(ச) கோதுமை மா | (அ) எவரேனும் ஆள் அல்லது பாவனையாளரினால் கோரப்பட்ட பொருட்கள் நியாயமான காலப்பகுதியினுள் மற்றும் சந்தை விலைக்கு தாமதமின்றியும் அல்லது 2033 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மூலம் நிர்ணயிக்கப்பட்ட அதிகூடிய விலைக்கு விநியோகிக்கப்பட வேண்டும்.<br><br>(ஆ) உற்பத்தியாளரின் உடைமை அல்லது கட்டுப்பாட்டில் போதுமான மூலப் பொருள், தொழிலாளர் அல்லது இயந்திரங்கள் இல்லாதவிடத்து, வேறெந்த காரணியும் உற்பத்திச் செயன்முறையை பாதிக்காத வரையில், உற்பத்திக் கொள்ளளவின் உச்சளவு பேணப்பட வேண்டும்.<br><br>(இ) பின்வரும் விபரங்கள் உள்ளடக்கிய எவரேனும் ஆள் அல்லது பாவனையாளருக்கு அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் வடிவிலான பற்றுச் சீட்டு/ விலைப்பட்டியல் வழங்கப்பட வேண்டும் மற்றும் அத்தகைய பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருக்க வேண்டும்.<br><br>(i) பற்றுச்சீட்டு/விலைப்பட்டியல் இல;<br><br>(ii) கொடுக்கல்வாங்கல் சில்லறையா அல்லது மொத்த விற்பனையா என்பது;<br><br>(iii) விற்பனைத் திகதி ;<br><br>(iv) விற்கப்பட்ட பொருட்களின் அளவு;<br><br>(v) விற்கப்பட்ட பொருட்களின் வகை;<br><br>(vi) விற்கப்பட்ட பொருட்களின் அலகொன்றின் பெறுமதி;<br><br>(vii) விற்கப்பட்ட பொருட்களின் மொத்த பெறுமதி;<br><br>(viii) ஏதேனுமிருப்பின் தொகுதி இல. அத்துடன்<br><br>(ix) எவரேனும் ஆள் அல்லது பாவனையாளரின் பெயரும் முகவரியும். |

**முதலாம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் 1*<br>*உற்பத்தியாளர்களின் வகை* | *நிரல் 2*<br>*பொருட்கள்* | *நிரல் 3*<br>*நிபந்தனைகள்* |
|---|---|---|
| | | (ஈ) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் எழுத்துமூலம் வழங்கப்பட்ட அறிவித்தலிலுள்ள அறிவுறுத்தல்கள் உற்பத்தி செயன்முறையை பாதிக்கும் எந்தவொரு காரணத்தின் எந்த வொரு நிகழ்வின் போதும் பின்பற்றப்பட வேண்டும்.<br><br>(உ) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை யின் எழுத்துமூல அனுமதியின்றி எந்த வொரு உற்பத்தியாளரும் உற்பத்திக் கொள்ளளவின் உச்ச எல்லையின் கீழ் ஒரு வருடத்திற்கு காலாண்டிற்கு பருவத்திற்கு அல்லது மாதத்திற்கு தேவைப்படும் மூலப் பொருட்களது சராசரி கொள்ளளவை விஞ்சும் மூலப்பொருட்களது எந்தவொரு கொள்ள ளவையும் உடைமையாக கொண்டிருத்தலாகாது.<br><br>மூலப்பொருட்களது அதிகளவான கொள்ள ளவை ஏதேனும் உற்பத்தியாளர் அவ்வாறு வைத்திருக்குமிடத்து, அத்தகைய உற்பத்தியாளர் அத்தகைய மூலப்பொருட்களது அதிகளவான கொள்ளளவை குறித்து நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையினால் எழுத்துமூலம் வழங்கப் பட்ட அறிவுறுத்தல்களுக்கமைவாக செயற்பட வேண்டும். |

**இரண்டாம் அட்டவணை**

| *நிரல் 1*<br>*வியாபாரிகளின் வகை* | *நிரல் 2*<br>*பொருட்கள்* | *நிரல் 3*<br>*நிபந்தனைகள்* |
|---|---|---|
| (1) பொருட்களை மொத்தமாக ஏனைய நபர்களுக்கு விற்பனை அல்லது விநியோகிக்கும் எவரேனும் ஆள்.<br><br>(2) பொருட்களை சில்லறை விலைகளில் பாவனையாளர் களுக்கு விற்பனை அல்லது விநியோகிக்கும் எவரேனும் ஆள்.<br><br>(3) பொருட்களை விற்பனை அல்லது விநியோக நோக்கத் துக்காக இறக்குமதி செய்யும் எவரேனும் ஆள். | (அ) விவசாயவேதிகள்<br>(ஆ) வாகன உதிரிப்பாகங்கள்<br>(இ) பெரிய வெங்காயங்கள் மற்றும் சிவப்பு வெங்காயங்கள்<br>(ஈ) குடிநீர் போத்தல்<br>(உ) தகரத்திலடைக்கப்பட்ட மீன்<br>(ஊ) சீமெந்து<br>(எ) பட்டாணிக் கடலைகள்<br>(ஏ) கோழி இறைச்சி<br>(ஐ) மல்லி<br>(ஒ) பருப்பு<br>(ஓ) டயபர் மற்றும் சனிடரி நப்கின்ஸ்<br>(ஔ) காய்ந்த மிளகாய்<br>(க) கருவாடு<br>(ச) சமையல் எண்ணெய் | (அ) எவரேனும் ஆள் அல்லது பாவனையாளரி னால் கோரப்பட்ட பொருட்கள் நியாயமான காலப்பகுதியினுள் மற்றும் சந்தை விலைக்கு தாமதமின்றியும் அல்லது 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மூலம் நிர்ணயிக்கப்பட்ட அதிகூடிய விலைக்கு விநியோகிக்கப்பட வேண்டும்.<br><br>(ஆ) பின்வரும் விபரங்கள் உள்ளடக்கிய எவரேனும் ஆள் அல்லது பாவனையாளருக்கு அச்சிடப் பட்ட அல்லது இலத்திரனியல் வடிவிலான பற்றுச் சீட்டு/ விலைப்பட்டியல் வழங்கப்பட வேண்டும் மற்றும் அத்தகைய பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருக்க வேண்டும்.<br><br>(i) பற்றுச்சீட்டு விலைப்பட்டியல் இல; |

**இரண்டாம் அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் 1*<br>*வியாபாரிகளின் வகை* | *நிரல் 2*<br>*பொருட்கள்* | *நிரல் 3*<br>*நிபந்தனைகள்* |
|---|---|---|
| (4) கருத்திற்கொள்ள வேண்டிய சேவைகளை வழங்கும் எவரேனும் ஆள். | (ட) சமையல் உப்பு<br>(த) முட்டைகள்<br>(ப) உரங்கள் (பசளை அல்லது இரசாயனம்)<br>(ர) உரம்<br>(ய) வெள்ளைப்பூடு<br>(ற) பயறு<br>(ல) LP வாயு<br>(வ) சோளம்<br>(ள) மருத்துவ உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்<br>(ழ) பால் மா/தூய பசும் பால்/ குழந்தைகளுக்கான பால் மா<br>(ங) நெல்<br>(ஞ) கிழங்கு<br>(ன) அரிசி<br>(அஅ) சிவப்பு வெங்காயம்<br>(அஆ) கட்டுமாணத் தொழில் துறையில் பயன்படுத்தப்படும் மணல், செங்கல் மற்றும் உலோகம்<br>(அஇ) எஃகு மற்றும் இரும்பு கம்பிகள்<br>(அஈ) சீனி (சிவப்பு மற்றும் வெள்ளை)<br>(அஉ) டயர் மற்றும் டியுப்<br>(அஊ) மஞ்சள்<br>(அஎ) கோதுமை மா | (ii) கொடுக்கல்வாங்கல் சில்லறையா அல்லது மொத்த விற்பனையா என்பது;<br>(iii) விற்பனைத் திகதி ;<br>(iv) விற்கப்பட்ட பொருட்களின் அளவு;<br>(v) விற்கப்பட்ட பொருட்களின் வகை;<br>(vi) விற்கப்பட்ட பொருட்களின் அலகொன்றின் பெறுமதி;<br>(vii) விற்கப்பட்ட பொருட்களின் மொத்தப் பெறுமதி;<br>(viii) ஏதேனுமிருப்பின் தொகுதி இல. அத்துடன்<br>(ix) எவரேனும் ஆள் அல்லது பாவனையாளரின் பெயரும் முகவரியும்.<br>(இ) நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினால் எழுத்துமூலம் வழங்கப்பட்ட அறிவித்தலிலுள்ள அறிவுறுத்தல்கள் ஏனைய நபரிற்கு மொத்தமாகவோ சில்லறையாகவோ பொருட்களை விற்றல் அல்லது விநியோகித்தல், விற்பனை அல்லது விநியோகத்திற்காக பொருட்களை இறக்குமதி செய்தல் அல்லது அத்தகைய காரணங்களுக்காக சேவைகள் வழங்குதலில் இடையூறு ஏற்படுத்தும் ஏதேனும் காரணிகள் நிகழும் சந்தர்ப்பத்தில் பின்பற்றப்பட வேண்டும். |

**சாந்த நிரியெல்ல,**
தவிசாளர்,
பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகாரசபை.

கொழும்பு,
*2022, ஓகத்து 30.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.